# பத்மநாபபுரம் நகராட்சி
## வியாழன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு – 04/டிசம்பர்/2025ம் ஆண்டுக்கான நகர் மன்ற சாதாரண மன்ற கூட்டம் பொருட்கள்

**மன்றப்பொருள்:1**

பத்மனாபபுரம் நகராட்சி பகுதியில் உள்ள அரண்மனைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் வாகனகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்ய நகராட்சி மூலம் குத்தகை விடப்பட்டு வருகிறது தற்பொழுது எதிர்வரும் 31/12/2025 உடன் குத்தகை உரிமை காலம் முடிவுடைதால் 01/01/2026 முதல் புதிதாக குத்தகை விடவும் பத்மநாபபுரம் அரண்மனை பார்க்க வரும் சுற்றுலா வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு வைப்புத்தொகை ரூ.5,00,000/– நிர்ணயக்கவும் பொது எலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்:1250/2020/A1)**

**அ கு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 476**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப்பொருள்:2**

பத்மனாபபுரம் நகராட்சி பகுதியில் உள்ள தக்கலை பேட்டை சந்தை சுங்கம் வசூலிக்கும் உரிமம் நுழைவுகட்டணம் வசூல் செய்ய இந்நகராட்சியில் மூலம் குத்தகை விடப்பட்டு வருகிறது தற்போது எதிர்வரும் 31/12/2025 உடன் குத்தகை உரிமகாலம் முடிவடைதால் 01/01/2026 முதல் புதிதாக குத்தகை விடவும் தக்கலை சந்தை சுங்கம் நுழைவுகட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு வைப்புத்தொகை ரூ.5,00000/– மற்றும் மின் இணைப்பு வைப்பு தொகை ரூ.10,000/– நிர்ணயக்கவும் பொது எலம்/ஒப்புந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்:1250/2020/A1)**

**அ கு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 477**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:3</u>**

அரசாணை நிலை (4 ப) எண்:56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள்:21.11.2025. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 14/08/2025 அன்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தினந்தோறும் காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும், என அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கிணங்க இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசால் வழங்கப்பட்டுள்ளஅரசாணை நிலை (4 ப) எண்:56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள்:21/11/2025 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.கு :</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இத்திட்டத்த்திற்கு ஆகும் செலவின தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 478**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்:4</u>**

பத்மனாபபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24 ன் கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசாணை எண்:(GD) எண்:39 நகராட்சி நிர்வாக மற்றும் குடி நீர் வழங்கல் துறை நாள்: 04/09/2023ன் படி அரசாணை வெளியிடப்பட்டு ரூ.6.39 கோடி மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது. அரசின் திட்ட நிதியாக ரூ.3.19 கோடியும், பங்குத்தொகையாக நிதி பங்கீடு செய்து மேற்படி திட்டத்தின் நகராட்சியின் பங்குதொகை கீழ் ரூ.3.19 கோடி அரசு நிதி பெறப்பட்டு பேருந்து நிலையம் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்திற்கு 3.19 கோடி பங்குத்தொகையாக செலுத்தக்கூடிய நிதிநிலை இல்லாத காரணத்தால் இவ்வலுவலகம் மூலம் மேற்கண்ட 3.19 கோடி தொகையை முழு மான்யமாக வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் அரசுக்கு கடிதம் அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்:630/2021/அ2 நாள்:6/8/2025 ன் படி பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டு வரும் கடைகளை முன் ஏல நடவடிக்கைகள் மேற்கொண்டு போதிய நிதி திரட்ட இந்நகர்மன்ற தீர்மானம் எண் 452 நாள் 30/9/2025 ன் படி நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 26/11/2025 அன்று ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கட்டிடத்தில் கடைகளின் வைப்புத்தொகை ரூ.2,00,000/- மற்றும் 500000/-

என நிர்ணயம் செய்யப்பட்டது.தற்போது மேற்படி பேருந்து நிலையம் நாகர்கோவில் முதல் திருவனந்தபுரம் வரை பிரதான சாலையில் அமைந்துள்ளதாலும் தக்கலை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி உள்ளதாலும் மேற்படி குத்தகை இனங்களுக்கான வைப்புத்தொகைகள் குறைவாக உள்ளதாலும் பத்மனாபபுரம் நகராட்சி பேருந்து நிலைய வணிக பயன்பாட்டு 31 கடைகளுக்கு ஏலம் விடப்பட்டு இருந்த நிலையில் நிர்வாக நலன் கருதி தற்பொழுது மேற்படி பேருந்து வளாகத்தில் உள்ள 3 கடைகள் மொத்தம் 34 கடைகள், பேருந்து நிலைய கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் சேர்த்து கீழ்கண்டவாறு வைப்புத்தொகைகளை மறு நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டு வர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குத்தகையினங்களின் விபரங்கள்**</u>

| வ. எண் | குத்தகை இனம் | உரிமையாணை காலம் | ஏலம் (அ) ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை | மின் இணைப்பு வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பத்மனாபபுரம் நகராட்சியில் புதிதாக பேருந்து நிலையத்தில் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் கதவுகளுடன் கூடிய (3X4) 147 சதுரஅடி உள்ள எண் 1 முதல் 7 மற்றும் எண் 2A, 3A உள்ள 9 RCC கடைகள் | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 5,00,000/- | 10,000/- |
| 2 | பேருந்து நிலையத்தில் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் (3 X 3) 112 சதுர அடிகள் உள்ள எண் 8 முதல் 15 வரை உள்ள 8 RCC கடைகள் | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 5,00,000/- | 10,000/- |
| 3 | பேருந்து நிலையத்தில் தரைதளத்தில் கட்டப்பட்டு வரும் RCC உணவு விடுதி (8.3 X 4) 388 சதுர அடி உள்ள RCC கடை | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 10,00,000/- | 10,000/- |
| 4 | பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் கட்டப்பட்டு வரும் 388 சதுர அடி (8.3 X 4) கொண்ட பொருட்கள் பாதுகாப்பு அறை மற்றும் ஓய்வு அறை | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 7,00,000/ | 10,000/- |
| 5 | பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் கட்டப்பட்டு வரும் (2.7 X 4) 116 சதுரஅடியில் 16ம் எண் கொண்ட ஒரு கடை | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 5,00,000/- | 10,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | பேருந்து நிலையத்தில் முதல்தளத்தில் கட்டப்பட்டு வரும் (3 X 4) 147 சதுரஅடியில் எண் 17 முதல் 21 வரை உள்ள 5 RCC கடைகள் | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 5,00,000/- | 10,000/- |
| 7 | பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் கட்டப்பட்டு வரும் (3 X 3) 112 சதுரஅடியில் கடை எண் 22 முதல் 30, 30A வரை உள்ள 10 RCC கடைகள் | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 5,00,000/- | 10,000/- |
| 8 | பேருந்து நிலையம் பின்புறம் உள்ள இருசக்கர வாகன நிறுத்தத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு வரை | 9,00,000/- | 10,000/- |
| 9 | பேருந்து நிலையம் இடதுபுறம் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு வரை | 5,00,000/- | 10,000/- |
| 10 | பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் கட்டப்பட்டு வரும் 1054 சதுர அடியில் கடை எண் 16A கொண்ட ஒரு ACC கடை | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் | 10,00,000/- | 10,000/- |

மேற்கண்டவாறு கடைகளை முன் ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்:1568/2025/அ1)**

**அ.கு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 479**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**மன்றப்பொருள்:5**

**புதிய சந்தையில் உள்ள கடைகளுக்கான பொது ஏல நிபந்தனைகள்**

1. ஏலம் கோரவிருப்பம் உள்ளவர்கள் அந்தந்த இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள வைப்புத்தொகையினை வங்கி வரைவோலை மூலம் (டிமாண்ட டிராப்ட்) ஏலத்திற்கு முந்தைய வேலை நாள் மாலை 5.00 மணிக்குள் நகராட்சி அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட பிரிவில் கொடுத்து உரிய அத்தாட்சி பெற்றுக் கொள்ள வேண்டும்.
2. ஏலத்திற்கு முந்தைய நாள் உரிய வரைவோலையாக செலுத்தி அத்தாட்சி பெறாதவர்கள் ஏல தினத்தன்று கண்டிப்பாக ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3. பொது ஏலம் விளம்பரம் செய்த நாள் முதல் ஏலத்திற்கு முந்தைய வேலை நாளன்று ஏல நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

4. ஏலம் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டும். ஒரு இனத்திற்கு கொடுக்கப்பட்ட வங்கி வரைவோலை செலுத்தப்பட்ட தொகை வேறு கடைக்கு எக்காரணம் கொண்டும் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
5. பொறுப்பு தொகை செலுத்தியவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
6. இதற்கு முன்பு ஏலம் எடுத்து உரிமம் தொகையை (தவணைத் தொகை) செலுத்த தவறியவர்கள் அல்லது நிலுவை உள்ளவர்கள் மற்றும் அவரது இரத்தம் சார்ந்த உறவுகள்/ வாரிசுகள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்களும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கமாட்டார்கள்.

7. கடைகள் ஒப்படைக்கப்படுவதிலிருந்து மூன்றாவது நிதியாண்டு மார்ச் 31–ம் தேதி வரை மட்டுமே முதலில் ஒப்படைக்கப்படும். பின்னர் உரிய புதுப்பித்தல் கட்டணம் வாடகை உயர்வுடன் கடைகளின் சதுர அடிப்படையில் புதுப்பித்தல் கட்டணம் கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.
   I. 100 சதுர அடி வரை ரூ,500/–
   II. 100 – 500 சதுர அடி வரை ரூ.1000/–,
   III. 500 – 100 சதுர அடிக்கு ரூ.1500/–,
   IV. 1000 சதுர அடிக்கு மேல் ரூ.2000/–,

மேற்படி தொகையினை செலுத்திய பின்பு 12 ஆண்டுகால தொகுப்பு அளவு வரை உரிமம் புதுப்பித்து வழங்கப்படும். ஒவ்வொரு வருடமும் வாடகையில் 5% உயர்வு செய்து வழங்கப்படும்.

8. உரிமம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து 12 ஆண்டுகளுக்கு பின்னர் அப்போதைய அரசு விதிகளின்படி வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டு தாங்கள் சம்மதிக்கும் நேர்வில் தங்களுக்கு கடை ஒப்படைக்கப்படும். அவ்வாறல்லாத நேர்வில் பொது ஏலம் விடப்படும்.
9. ஏலம் உறுதி செய்யப்பட்டதும் ரூ.100/– மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் தயார் செய்து புகைப்படம் ஒட்டி ஆதார் அட்டை நகல் இணைத்து நோட்டரி வழக்கறிஞர் ஒப்பம் பெற்று மூன்று தினங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
10. வாடகையுடன் அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் உரிம கட்டணம் /தொழில்வரி/ சேவைவரி குறித்த காலத்திற்குள் தவறாது செலுத்தப்பட வேண்டும்.
11. நகராட்சியில் குறிப்பிட்டுள்ள இனத்திற்கான வைப்புத் தொகை மாற்று இனத்திற்கு ஈடு செய்து வழங்கப்பட மாட்டாது.

12. கடை உரிமம் பெற்றவர்கள் கடை வாடகையினை அந்தந்த மாதம் 5–ம் தேதிக்குள் தவறாது செலுத்தப்பட வேண்டும்.
13. மாதந்தோறும் 5–ம் தேதிக்குள் வாடகை செலுத்தாத கடையினை நகராட்சி எந்தவித அறிவிப்பின்றி கடையினை பூட்டி சீல் வைக்கப்படும்.
14. கடைகளில் அரசால் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் எதுவும் விற்பனை செய்ய கூடாது. மேலும் வேறு பயன்களுக்காகவோ / குடியிருப்பாகவோ பயன்படுத்த கூடாது.
15. மின் இணைப்பு "ஆணையாளர், குழித்துறை நகராட்சி" என்ற பெயரில் மட்டுமே எடுக்க வேண்டும். மேலும் மின் கட்டணம் மாதந்தோறும் நேரிடையாக மின் வாரியத்தில் செலுத்தப்பட வேண்டும். கூடுதல் மின் கட்டண பொறுப்பு தொகையும் குத்தகைதாரரை சார்ந்தது ஆகும்.
16. மேற்படி கடையின் குடிநீர் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் தங்களுடைய சொந்த செலவில் நகராட்சி அனுமதி பெற்று இணைப்பு பெற வேண்டும். அதற்கான குடிநீர் கட்டணம் கடையின் உரிமத்தாரர் செலுத்த வேண்டும். தவறிடும் நேர்வில் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்படும்.
17. கடை வாடகை செலுத்தும் போது சேவைவரியுடன் செலுத்தப்பட வேண்டும். மேலும் அவ்வப்போது அரசால் நிர்ணயம் செய்யப்படும் சேவை வரி செலுத்தப்பட வேண்டும்
18. மேற்படி கடைகளில் ஆக்கிரமிப்பு மற்றும் வேறு ஏதேனும் மாறுதல் செய்யக்கூடாது. அவ்வாறு கடைகளில் மாறுதல் ஏதேனும் செய்யப்பட்டால் உடனடியாக உரிமம் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
19. 2025–2026–ம் ஆண்டு நகராட்சி பொது ஏல அறிக்கையில் இருக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுபட்டு நடந்து கொள்ள வேண்டும்.
20. நகராட்சி மற்றும் அரசால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
21. மேற்படி நிபந்தனைகளின்படி நடக்க தவறினால் நகராட்சி பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி தங்களுடைய வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதோடு அதனால் ஏற்படும் சகல இழப்புகளுக்கும் தங்களை பொறுப்பாக்கப்படும்.
22. கடை உரிமம்தாரர் 2025–2026–ம் ஆண்டு பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு கடைகளுக்கு விற்பனைக்கு கொண்டு வரும் பொருட்களுக்கு நகராட்சி ஏல நிபந்தனைகள்படி நுழைவு கட்டணம் செலுத்த கடமைபட்டவர்கள் ஆவார்கள்.
23. தொழுநோய் உள்ளவர்களையும் பிற தொற்றுநோய் உள்ளவர்களையும் சந்தைக்குள் அனுமதிக்க கூடாது.
24. பொது மக்களின் போக்குவரத்திற்கு வசதியாக பொருட்களை கடைக்குள் ஒழுங்காக வைத்து விற்பனை செய்ய வேண்டும். இதற்கு ஆணையரோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவரோ வழி எந்த முறையில் இருக்க வேண்டுமென்று கூறுகிறாரோ அதையே வழியாக ஏற்க வேண்டும்.

25. கடையினுள் எளிதாக தீ பற்றக்கூடிய பொருள்களை பயன்படுத்த கூடாது.

26. எளிதில் தீ பற்றக்கூடிய பட்டாசுகள் மற்றும் இதர அபாயகரமான பொருட்கள் சேமிக்க / விற்பனை செய்ய அனுமதி கிடையாது.

27. ஏலம் உறுதி செய்யப்பட்டதும் ஒருவருட வாடகை தொகையினை கூடுதல்வைப்புத் தொகையாகவும் செலுத்த வேண்டும்.

28. கடைகளை அரசியல்கட்சி / சங்க அலுவலகங்களுக்காக பயன்படுத்த அனுமதிக்க கூடாது.

29. கடை உறுதி செய்யப்பட்டு ஆணை வழங்கிய நாள் முதல்கடை வாடகை உரிமம்தாரர் செலுத்தப்பட வேண்டும்.

30. உரிமைதாரருக்கு உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள் தொடர்ந்து உரிமம் நடத்தப்பட வேண்டும், இதற்கு இடைப்பட்ட காலத்தில் உரிமம் நகராட்சி வசம் ஒப்படைத்தால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும். இதனால் ஏற்படும் இழப்புத்தொகையினை உரிமைதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

31. ஏலத்தில்கலந்து கொள்பவர்களின் எவரெனும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன் உள்ள கேள்விக்கோ அல்லது உச்ச ஒப்பந்தப்புள்ளிக்கோ குத்தகை உரிமையாணையை எடுக்க விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உச்ச கேள்வியின் முழுத்தொகையும் மற்றும் ஏலத்தொகையில்1/3 பங்கு தொகையை சேர்த்து செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். மனுவில்தான் கேட்க விரும்பும் தொகையை தெளிவாக குறிப்பிட்டு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டு வர மனு செய்து கொள்ளலாம். இதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய ஆணையருக்கு பூரண உரிமையுண்டு. ஏலக்கேள்வி உச்சமாக இருந்தால்ஏலத்தில்மட்டும் கலந்து கொண்டவர்கள் மட்டும் மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர மனு செய்ய தகுதி பெற்றவர்கள். மேலும் கூடுதல்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு விருப்பம் தெரிவித்து மறுஏலம் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவரும் நிபந்தனை முதல்மற்றும் அடுத்தடுத்த அழைப்புக்கு மட்டுமே பொருந்தும் இறுதி என குறிப்பிட்ட அழைப்புக்கு இது பொருந்தாது.

## <u>அனைத்து இனங்களுக்கும் பொது நிபந்தனைகள்</u>

1. ஏலங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட பொது நிபந்தனைகளுக்கும், 1998 வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகள், வழிச்சட்டங்கள், உ.பவிதிகள் கணக்கு விதிகள் அரசாணைகள் மற்றும் நகர்மன்றம் விதித்துள்ள அல்லது இனிவிதிக்கும் பொதுக்கட்டுபாடுகள் மற்றும் சிறப்புக் கட்டுப்பாடுகள் யாவற்றுக்கும் உட்பட்டவையாகும்.
2. பட்டியலில் கண்டுள்ளபடி குத்தகை உரிம இனங்களுக்கு முறையே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) அரசாணை (நிலை) எண்.181, நாள் 19–09–2008–ன்படி உரிமம் வழங்கப்படும்.

3. ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் தாங்களே நேரிலோ அல்லது எழுத்து மூலம் ரூ.100 மதிப்புள்ள முத்திரைத் தாளில் எழுதி அதிகாரம் அளித்த முகவர் மூலமாக ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.
4. ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர் ஏலம் நடக்கும் நாளுக்கு முன்தினம் 5.00 மணிக்குள் கூடுதல் ஏலப்பொறுப்புத் தொகை மற்றும் வங்கி உத்திரவாத சான்றிதழுடன் கலந்து கொள்ளும் ஏல இன விபரங்களை எழுத்து மூலமாக மனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
5. ஏலம் எடுக்காதவரின் பொறுப்பு தொகை ஏலம் முடிந்தவுடன் ஏலதாரர் ஆணையருக்கு கடிதம் எழுதி கொடுத்து திருப்பி பெற்றுக் கொள்ளலாம். ஆனால் உச்ச கேள்விக்கு மேல் அடுத்த கேள்வி கேட்பவருடைய பொறுப்பு தொகையை ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் திரும்ப வழங்க வேண்டும்.
6. இந்நகராட்சியில் இதற்கு முன் ஏலம் எடுத்த நபர்கள் முறையாக ஏலத்தொகை செலுத்தாதவர்கள் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து நிலுவயிலுள்ளவர்கள், கிரிமினல் கோர்ட்டில் தண்டணை அடைந்தவர் என்ற காரணத்திலாவது அல்லது முந்தைய ஒப்பந்தங்களின் நிபந்தனைப்படி நடக்காததினால் மறுபடியும் நகராட்சியில் குத்தகைக்கு கொடுப்பது உசிதமில்லை என்ற காரணத்தினால் எவர் ஒருவரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு கலந்து ஏலம் எடுத்தது பிற்காலத்தில் தெரிய வருமானால் அவர்கள் ஏலம் எடுத்த குத்தகையை ரத்து செய்ய ஆணையர் மற்றும் நகர்மன்றத்திற்கு அதிகாரமுண்டு. அசையா சொத்துக்கள் இல்லாதவர் என்ற காரணத்திலாவது அல்லது ஏலம் நடந்து கொண்டிருக்கும்போது அவருடைய கேள்விகளில் சந்தேகத்திற்கு இடமிருந்தாலோ அல்லது கபடமானதும் உண்மைக்கு புறம்பானதும் என்றாவது கேள்விதாரர் போதுமான சொத்து இல்லாதவர் என்ற காரணத்திலாவது மற்றும் நகர்மன்றத்துக்கு உண்மையாகவே நஷ்டம் ஏற்படுமென்று கருதப்படக்கூடியதாக இருக்கக்கூடிய ஒருவருடைய கேள்வியை காரணம் சொல்லாமல் ஏலம் நடத்தும் அதிகாரி தன் யுக்திப்படி ஒப்புக்கொள்ளாமல் தள்ளி விட அதிகாரமுண்டு.
7. ஏலம் நடக்கும் காலத்திலோ அல்லது பிறகோ எந்த நிலையிலும் இந்த அறிக்கையில்கண்ட நிபந்தனைகளையும் தளர்த்தவோ, மாற்றவோ, சேர்க்கவோ அல்லது உரிம காலத்தை குறைக்கவோ நகர்மன்றம் மற்றும் ஆணையர் ஆகியாருக்கு பூரண அதிகாரமுண்டு. இந்த ஏல அறிக்கையில் ஏலம் நடத்துவதற்காக குறிப்பிட்டுள்ளஇனங்களில்எந்த ஒரு இனத்தையும் நிர்வாக காரணங்களை முன்னிட்டு பொது ஏலம் நடத்தாமல் இருக்க மற்றும் ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்திற்கு பூரண அதிகாரமுண்டு.

8. அறிவிக்கப்பட்ட ஏலங்களை ஏலம் ஆரம்பிக்கும் முன்போ நடக்கும் போதோ எந்த நிலையிலும் நிறுத்தவோ, ஒத்திவைக்கவோ ரத்து செய்து விடவோ ஆணையாளருக்கோ அல்லது அவர் அதிகாரம் பெற்ற அலுவலருக்கோ அதிகாரம் உண்டு.

9. வாழைத்தார் நடத்தும் உரிமைதாரர்கள் தங்களுடைய சொந்த செலவில் வாழைத்தண்டு, வாழை இலைகள் மறறும் வாழைத்தாரின் கழிவுகளை மாற்றம் செய்ய வேண்டும்.
10. கடை நடத்தும் உரிமதாரர்கள் தங்கள் கடைகளில் சேகரமாகும் மட்கும், மட்கா குப்பைகளை தங்களுடைய சொந்த செலவில் அப்புறப்படுத்த வேண்டும்.
11. குத்தகை நிலுவை / குத்தகை நிபந்தனைகள் மீறல் ஆகியவற்றின் அடிப்படையில் குத்தகையினை ஆணையாளரால் ரத்து செய்யப்படும்
12. துப்புரவு பணியாளர் பயன்படுத்தப்படுமாயின் அதற்கான தொகையினை குத்தகைத்தாரரே நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.
13. உரிமைதாருக்கு உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள் தொடர்ந்து உரிமம் நடத்தப்பட வேண்டும், இதற்கு இடைப்பட்ட காலத்தில் உரிமம் நகராட்சி வசம் ஒப்படைத்தால் வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும். இதனால் ஏற்படும் இழப்புத்தொகையினை உரிமைதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.
14. ஏலம் நடக்கும்பொழுது ஏலம் நடத்துகிறவர் அவசியமென கருதினால்அவர் குறிப்பிடும் ஒரு தேதிக்கு ஏலத்தை எந்த நிலையிலும் தள்ளி வைக்க அதிகாரமுண்டு. அவ்விதம் செய்வதில்அன்றைய தினம் எவரொருவர் அதிக தொகைக்கு ஏலம் கேட்கிறாரோ அத்தொகையானது ஏலம் மாற்றி வைக்கப்பட்டிருக்கும் நாளில்தான் கேள்வியாக வைத்து ஏலம் துவங்கும்.
15. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரும்போது ஓர் ஆண்டிற்கான தொகை மட்டுமே குறிப்பிட்டு கேட்க வேண்டும்.
16. உரிமையாணைகள் அனைத்தும் 1998 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின்சட்டத்திற்கும், அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை (ந.நி.4) நாள் 19-09-2008 மற்றும் பொது நலச்சட்டத்திற்கும், நகராட்சிகளின் சொத்து இடங்கள் நகராட்சி கையேடு விதிகளுக்கும் நடைமுறைகளில்உள்ளதுடன் அவ்வப்போது வெளியாகும் அரசாணைகளுக்கும் நகர்மன்றம் செய்துள்ள அல்லது இனிச் செய்யவுள்ள பொதுக்கட்டுபாடுகளுக்கும், சிறப்புக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவையாகும்.
17. வைப்புத்தொகை செலுத்தாதவர்களை ஏலத்தில் பங்கெடுக்க அனுமதிக்க இயலாது
18. ஏலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஏலம் கோரும் தொகை அதிகமாகும் பட்சத்தில்ஏலம் நடத்தும் அதிகாரியால்நிர்ணயிக்கப்படும் கூடுதல் வைப்புத் தொகையை ஏலம் கோருபவர்கள் செலுத்த வேண்டும்.
19. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்களில் எவரெனும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன் உச்ச கேள்விக்கோ அல்லது உச்ச ஒப்பந்தப்புள்ளிக்கோ குத்தகை உரிமையாணையை எடுக்க விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உச்ச கேள்வியின் முழுத்தொகையும் மற்றும் ஏலத்தொகையில் 1/3 பங்கு தொகையை சேர்த்து செலுத்த விண்ணப்பிக்க வேண்டும். மனுவில் தான் கேட்க விரும்பும் தொகையை தெளிவாக குறிப்பிட்டு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர மனு செய்து கொள்ளலாம். இதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய ஆணையருக்கு பூரண உரிமையுண்டு. ஏலக்கேள்வி உச்சமாக இருந்தால் ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டவர்கள் மட்டும் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர

மனு செய்ய தகுதி பெற்றவர்கள் மேலும், கூடுதல்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு விருப்பம் தெரிவித்து மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கொண்டு வரும் நிபந்தனை முதல்மற்றும் அடுத்தடுத்த அழைப்புக்கு மட்டுமே பொருந்தும் இறுதி என குறிப்பிட்ட அழைப்புக்கு இது பொருந்தாது.

20. ஏலக்கேள்வி ஊர்ஜிதமான உடனேயே குத்தகை ஒப்பந்தம் (Concluded contract) முழுமையாகிறது நகர்மன்றத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு அப்படி அறிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் அல்லது அலுவலகம் நிர்ணயிக்கப்படும் கால அளவுக்குள் ஒப்புகொள்ளப்பட்ட ஏலதாரர் தான் முன்னமே செலுத்தியுள்ள முதல் பொறுப்புத் தொகையின்றி ஓராண்டு உரிமையாணை தொகை முழுவதும் செலுத்த வேண்டியதோடு அல்லாமல் மின் இணைப்புக்கு பிணை வைப்புத்தொகை சம்பந்தப்பட்ட இனத்திற்கு தகுந்தவாறு செலுத்துவதோடு தாம் மேற்கொள்ளும் உரிமையாணைக்குரிய தொகை செலுத்துவதற்கும் ஏலக்கட்டுப்பாடுகளை ஒப்புக்கொண்டதற்கும் சான்றாக தம் செலவில் மன்றத்தாரால் ஏலம் ஊர்ஜிதமான 3 நாட்களுக்குள் உரிமையாணைதாரர்கள் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் உரிமையாணை ஒப்பந்தப்பத்திரம் எழுதித்தர வேண்டும். அவ்வாறு செய்து தர தவறினால் உரிமையினை அனுபவிக்க அனுமதிக்கப்படமாட்டாது. மேலும், உரிமையாணையை அவர் பொறுப்பில்ரத்து செய்யப்பட்டு மறுஏலம் விடப்படும். இம்மறு ஏலத்தில்நகராட்சிக்கு நட்டம் ஏற்பட்டால்அதற்கு அவரே முழு பொறுப்பாவார்.

21. ஏலம் எடுத்தவர்கள் ஏலப்பதிவேட்டிலும் ஏல அறிக்கையிலும், ஏலம் முடிந்தவுடனேயே கையொப்பம் இட வேண்டும்.

22. மேற்படி ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை இதர வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் நகராட்சியால் வழங்கப்படமாட்டாது.

23. ஏலம் முடிவடைந்த பிறகு ஏலப்பட்டியலை 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 68 மற்றும் 68(எ) மற்றும் 69 பிரிவுகளின்படி நகர்மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படும். முடிவெடுக்கும் உரிமை நகர்மன்றத்திற்கு தான் உண்டு. உச்ச கேள்வியையோ, வரவிருந்த கேள்வியையோ ஏலதாரருக்கு எந்த காரணமும் காட்டாமல் தள்ளி விடவோ அல்லது ஒப்புக்கொள்ளவோ நகர்மன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

24. ஏலத்தொகை மன்றத்தால் உறுதி செய்யப்பட்ட பின் அலுவலகத்தால் நிர்ணயிக்கப்படும் உரிய காலக்கெடுவிற்குள் ஓராண்டு தொகையை முழுவதுமாக ஒரே தவணையில் செலுத்த வேண்டும்.

25. எவைகளுக்கு நில வாடகை அல்லது கட்டாயம் அரசுக்கு செலுத்த வேண்டுமோ அவைகளுக்கு உரிமைதாரரால் செலுத்த வேண்டிய தொகையை ஆணையாளர் உத்திரவிடப்பட்டவுடன் உரிமைதாரர் நகராட்சி அலுவலகத்தில்செலுத்த வேண்டும்.

26. உரிமம் அல்லது உரிமையை வழங்குவது குறித்து மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட பின்பு வேறு யாராவது கூடுதல் தொகைக்கு கேட்டால்ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

27. நகர்மன்ற தீர்மானத்தின்படி உரிமத்திற்கு விடப்பட்ட சொத்துக்கள் நகராட்சிக்கு தேவையென்று கருதி முன் அறிவிப்பு கொடுத்து உரிமை காலத்தின் இடையில் எந்த நிலையிலும் உரிமத்தை நிறுத்தி விட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. அப்படி நிறுத்துவதற்காக உரிமம் பெற்றவருக்கு நகராட்சி மன்ற முடிவின்படி தொகை தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். ஆனால் உரிமைதாரருக்கு வேறு யாதொரு ஈடும் கேட்க உரிமையில்லை.

28. ஒவ்வொரு உரிமமும் பொதுவாக உயர்ந்த தொகை கோரியவர்களுக்கே விடப்படும். ஆனால்எவ்வித காரணமும் தெரிவிக்காமல் எந்தவொரு ஏலத்தையும் ஒப்புகொள்ளவாவது அல்லது உயர்ந்த கேள்வியை தவிர்த்து மற்றும் எந்தவொரு கேள்வியை ஏற்கவாவது அல்லது ஏலத்தை மறுத்து விடவாவது நகர்மன்றத்திற்கோ அல்லது நகர்மன்றத்தின் அதிகாரம் பெற்ற ஆணையாளருக்கோ அதிகாரம் உண்டு. காரணம் தெரிவிக்காமலே எந்த ஏலத்தையும் ஒத்திப்போடவோ அல்லது மறுமுறை ஏலத்தில் விடவோ நகர்மன்றத்திற்கோ அல்லது ஆணையாளருக்கோ, அதிகாரமுண்டு.

29. ஏலம் எடுத்தவர்கள் நகர்மன்றத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக எக்காரணத்தைக் கொண்டும் உரிமத்திலிருந்து விலக்கிகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். அப்படி ஏலத்திலிருந்து விலக்கிக்கொள்ளும் பட்சத்தில் அவர்கள் கட்டிய ஏல வைப்புத் தொகையை இழப்பதுடன் மறுஏலம் போடுவதினால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் பொறுப்பாவார்கள்.

30.இத்துடன் இணைத்திருக்கும் அட்டவணைகளிலும், சிறப்பு நிபந்தனைகளிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணங்களுக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் உரிமதாரர் அதிகம் வசூலிக்கக்கூடாது. உரிமைதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் வசூலிக்கும் எல்லாத்தொகைக்கும் ஆணையர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட முறையில் அச்சு ரசீது கொடுக்க வேண்டும். மேற்படி அச்சு ரசீது கட்டுகளை பயன்படுத்துவதற்கு முன் அலுவலகத்திற்கு கொண்டு வந்து அலுவலக முத்திரையை போட்டுக்கொள்ள வேண்டும். அலுவலக முத்திரை போடாத ரசீதுகள் செல்லுபடி ஆகாததுடன் அவ்வாறு செய்தமைக்கும் உரிமதாரருக்கு அபராதமும் விதிக்கப்படும். அந்த ரசீது சீட்டுகளில் புத்தக எண், தொடர் எண், பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரிமைதாரரால் கொடுக்கப்படும் எந்த ரசீது சீட்டையும், ஆணையரும் அவரது அதிகாரம் பெற்றவர்களும் தணிக்கை செய்ய உரிமையுண்டு. உரிமதாரர்களால் கட்டணம் வசூலிப்பதற்காக நியமிக்கப்படும் பணியாளர்களின் பெயர்களை புகைப்படத்துடன் அவ்வப்போது நகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

31. எந்த உரிமைதாரரும் உரிமகாலத்திற்கு இடையில் ஒழுங்காக உரிமத்தொகையை செலுத்த தவறினால் அவருடைய உரிமம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்ய நகர்மன்றத்திற்கு பூரண அதிகாரமுண்டு. அப்படி ரத்து செய்வதால் நகராட்சிக்கு ஏற்படக்கூடிய சகல நஷ்டங்களுக்கும் மறு ஏலம் விடப்படுவதால் ஏற்படும் இழப்பிற்கும் மேற்படி உரிமதாரரே முழுபொறுப்பாவதுடன் மேற்படி நஷ்டத்தொகையை தமிழ்நாடு நகராட்சிகள் 1920-ம் ஆண்டு சட்டத்தின் உரிய பிரிவின்படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது மூலமாகவும் நகராட்சிக்கு ஈடு செய்ய உடன்பட்டவராவார்.

32. மாத வாடகையை குத்தகை மாதம் முதல்தொடங்கி ஒவ்வொரு ஆங்கில மாதம் 5–ம் தேதி அலுவலகம் வேலை செய்யும் நாளில்குத்தகை தொகைகள் முன் கூட்டியே செலுத்தப்பட வேண்டும். 5–ம் தேதி அலுவலகம் விடுறையாக இருந்தால்அடுத்த வேலை நாளில்செலுத்தப்பட வேண்டும். உரிமையாணைத் தொகையை மேலே குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்த தவறினால் அவர்கள் கடைக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு, தண்ணீர் குழாய்இணைப்பு முதலியவற்றை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி துண்டிக்கப்படும். குறிப்பாக குத்தகை ஆரம்பிக்கும் மாதத்திற்கு உரிய தவணை குத்தகை தொகையை முன்னதாக கட்டிய பிறகே குத்தகை ஒப்படைக்கப்படும். அதாவது 3 மாத குத்தகை தொகையுடன் சேர்த்தால் ஒவ்வொரு குத்தகையும் நான்கு மாதத்திற்கு குத்தகை தொகை முன்னதாக கட்ட வேண்டும். குத்தகை தொகை கட்ட தவறுபவர்கள் குத்தகை இனம் அம்மாத கூட்டத்திலேயே வைத்து குத்தகை ரத்து செய்யப்படும். இதில்மன்றத்தின் முடிவே இறுதியானது.

33. எந்தக் காரணத்தைக் கொண்டும் உரிமம் அல்லது உரிமையாணை தொகையில்எந்த பாகத்தையும் தள்ளுபடி செய்யும்படி கேட்கவும் இந்த அறிக்கையில்சிறப்பு நிபந்தனைகளில் வரையறுத்திருக்கும் கட்டணத்திற்கு கூடுதலாக வசூலித்துக் கொள்ள உரிமையளிக்கும்படி கேட்கவும் உரிமதாரருக்கு உரிமையில்லை. மேலும் உரிமதாரருக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்களை இலாகா மூலம் பராமரிப்பு செய்வதினாலாவது அல்லது அவைகளை சரி செய்து அபிவிருத்தி செய்வதினாலாவது ஏதாவது தற்காலிக இடைஞ¦சல்கள் ஏற்பட்டால்அதற்காக நஷ்டஈடு கேட்க உரிதாரருக்கு உரிமையில்லை.

34. உரிமையாணை கீழ் ஒப்புவிக்கப்பட்ட சொத்து முழுவதையுமாவது அல்லது அதன் ஒரு பாகத்தையாவது ஒப்பந்த காலம் முடிவு பெறுமுன் எந்த சமயத்திலாவது நகர்மன்ற அல்லது பொதுக்காரியங்களுக்கு வேண்டி நகர்மன்றம் கோரி அவைகளை நகராட்சி வசம் திருப்பிக் கொடுத்தால்அவ்விதம் உரிமம் அனுபவிக்க முடியாமல்போகும் காலத்திற்கு நகர்மன்றத்தால் நிர்ணயிக்கும் கால விகிதாச்சார கிஸ¦தி தள்ளுபடி அல்லது நஷ்டஈடு பெற்றுக்கொள்ள உரிமதாரர் கடமைப்பட்டவராவார். இது விஷயத்தில் அதற்காக எந்தவித நஷ்டயீடும் கோர உரிமையாணைதாரருக்கு உரிமையில்லை. மேலும் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது தவறினால்எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமையாணை ரத்து செய்யப்படும்.

35. உரிமத்திற்கு விடப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான சந்தை மற்றும் இதர இடங்களில் இந்நகராட்சி ஆணையர் அவர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எவ்வித பொருளும் வைக்கக்கூடாது என்றும் அல்லது எவ்வித குறிப்பிட்ட பொருளும் விற்கக்கூடாது என்றும் அந்த இடம் காலியாக வைக்கப்பட வேண்டும் என்றும் தெரியப்படுத்தினால்மேற்படி இடத்தில்எந்த பொருளும் வைக்காமல்அல்லது விற்பனை செய்யாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். இது விஷயத்தில்ஆணையரின் தீர்ப்பே முடிவானதும் உரிமையாணைதாரரையும் கடைக்காரர்களையும் விற்பனைக்கு கொண்டு வருபவர்களையும் கட்டுப்படுத்துவதாகும்.

36. உரிமதாரர் இறந்து போனாலும் அல்லது கடன்காரராக போனாலும் அவருடைய வாரிசுகள் எக்ஸ்கியூட்டர்கள் அட்மினிஸ்ட்ரேட்டர்கள் அல்லது அவருடைய

அசைனிகள் மன்றத்தில் தீர்ப்பிட்டு மேற்படி உரிம ஒப்பந்த நிபந்தனைப்படி நடக்க கட்டுப்பட்டவராவார்கள். ஆனால் மன்றம் உரிமத்தை ரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானித்தால் மேற்படியார்கள் உரிமத்தை மேற்கொண்டு நடத்த முடியாது.

37. உரிமையாணை பெற்றவர் இதில்குறிப்பிட்ட எந்தவொரு நிபந்தனைப்படியும் நடக்க தவறினாலும் உரிமையாணைதாரருக்கு எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்காமல்சம்மந்தப்பட்ட கட்டிடத்தில்இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பை துண்டித்து மின் சப்ளையை நிறுத்தவோ உரிமையாணைதாரரையும் அவர் பொருட்களையும் உரிமையாணை ஸ்தலத்தில்இருந்து அப்புறப்படுத்தி இடத்தை பூட்டி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு இதனால்உரிமையாணைதாரர் தொழில்செய்வதில்ஏற்படும் இடையூறுகளுக்கும், நஷ்டங்களுக்கும் நகர்மன்றம் பொறுப்பல்ல.

38. உரிமைதாரர் பட்டியலில் கண்டுள்ள இடங்களில் மின் இணைப்பு தேவையானவற்றிற்கு மின் வாரியத்திடம் தன் சொந்த பொறுப்பில்ஆணையர் குழித்துறை நகராட்சி பெயரில்தனி மின் இணைப்பு பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் மின்கட்டணம் கூடுதல்வைப்புத் தொகை மீட்டர் பழுது கட்டணம் உரிமம்/ குத்தகைதாரரை சார்ந்தது.

39. இத்தொகைகளை சரிவர கட்ட தவறினாலும் அல்லது வேறேதேனும் தவறுகள் செய்வதாலும் மின்சார சட்ட திட்டங்களின் பேரில்உரிமையாணைதாரர் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி இடத்தில்உள்ள மின் இணைப்பு கண்டிப்பாக உரிமையாணைதாரரின் பெயருக்கு தரப்படமாட்டது.

40. மின் மீட்டர் பழுதுபட்டாலோ அல்லது மின்சார விதிகளுக்கு புறம்பாக குறைபாடுகள் ஏதாவது மின்சார துறையினரால் கண்டுபிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்கு உரிமையாணைதாரரே முழு பொறுப்பாவார். மேலும் மின் இலாகாவால்விதிக்கப்படும் தண்டத்தீர்வைக்கு உரிமையாணைதாரர் முழு பொறுப்பாவார். நகராட்சியானது எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

41. நகராட்சி உரிமையாணை இடங்களில் கூடுதலாகவோ அல்லது ஒரு பகுதிக்கோ மின் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் அந்தந்த உரிமையாணைதாரர் அவருடைய சொந்த பொறுப்பிலும், செலவிலும் மின் வாரியம் மூலம் அமைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெறப்படும் மின் இணைப்பு "ஆணையர். குழித்துறை நகராட்சி" கொடுக்கப்படும். அவ்வாறு பெறப்படும் மின் இணைப்பிற்கு ரூ.5000/– வைப்புத் தொகையாக நகராட்சி கருவூலத்தில்செலுத்த வேண்டும். மேற்படி மின் இணைப்பு கொடப்பது ஆணையர் முடிவுப்படி நடக்க உரிமையாணைதாரர் கடமைப்பட்டவராவார்.

42. உரிமத்திற்கு விடப்பட்ட இடத்தில் நகராட்சியில் பொருத்தப்பட்டுள்ள மின்சார விளக்குகள் இதர விளக்குகள் மற்றும் இதர தளவாட மற்றும் எல்லா சாமான்களின் பாதுகாப்பிற்கும் உரிமைதாரரே பொறுப்பாளியாவார். இதில் ஏதேனும் குறைபாடுகள் தெரிய வந்தால் அதை உடனடியாக திருப்பித்தர வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். தவறும் பட்சத்தில் மேற்படி பொருளின் கிரையத்தை நகராட்சி அலுவலகத்தில் செலுத்த உரிமதாரர் கட்டுப்பட்டவராவார்.

அப்படியும் கட்டத்தவறினால் அவர் கட்டிய வைப்புத்தொகையில் இருந்து மேற்படி தொகை பிடித்தம் செய்யப்படும்.

43. நகராட்சியின் முத்திரையை போட்டுக் கொள்ளாமல்சீட்டுகளை வழங்கும் உரிமதாரர்கள் பேரில் கடும் நடவடிக்கை எடுத்து அவர்களது விளக்கம் பெறாமலேயே அம்மாதிரி கட்டுப்பாட்டிற்கு மீறி அவர்கள் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூ.1000/−க்கு அதிகபடாமல் அபராதம் விதிக்கப்படும். அவ்வாறு விதிக்கப்படும் அபராதம் ரூ.5000/−க்கு அதிகப்படுமானால் உரிமையாணை பெற்றவர் நகராட்சி மன்றத்திற்கு முறையீடு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் வசூல்செய்யும் கட்டணத்திற்கு கணக்கு விபரம் சரியாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அக்கணக்குகளை பரிசீலனை செய்ய அனுமதிக்க உரிமதாரர் கட்டுப்பட்டவராவார்.

44. உரிமையாணை காலத்தில் உரிமையாணை பெற்றவர் பிறர் பெயரிலாவது அல்லது உரிமையாணை பெற்றவர் பிறராவது தொடர்ந்தால் அவைகளுக்காக ஏற்படும் பொருள் செலவிற்கோ யாதொரு பகுதியும் நகராட்சி ஏற்றுக்கொள்ள முடியாததுடன் நகராட்சி எந்த விதத்திலும் இதற்கு பொறுப்பேற்காது.

45. உரிமையாணை காலத்தில் இந்த நிபந்தனைகளில்உள்ள இனங்கள் அரசு அல்லது நகராட்சியால்மாற்றப்பட்டாலும் அல்லது எங்கு இயங்கினாலும் உரிமையாணைதாரர் அங்கு இதில்கண்டுள்ள கட்டணங்களையே எடுத்துக்கொள்ள வேண்டியது. அதற்காக நகராட்சியிலிருந்து எவ்தவித நஷ்டயீடோ அல்லது உரிமையாணையோ ரத்து செய்யும்படி கேட்கவோ உரிமையாணைதாரருக்கு எந்தவித உரிமையும் இல்லை.

46. உரிம காலத்தில்உரிமத்திற்கு விடப்பட்டுள்ள இடங்களில்சட்டம், ஒழுங்கு (Law and Order) அமைதி நிலவ அவ்வப்போது உரிமம் பெற்றவர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் அவர்கள் தவறுவார்களோயானால் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் பேரில் நகராட்சியால் எடுக்கப்படும்.

47. உரிமம் இடத்தில் உரிமதாரர் தன்னால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிப்பந்திகள், ஏஜெண்டுகள் முதலானவர்கள் பெயர்களை அவ்வப்போது ஆணையாளருக்கு தெரிவிக்க வேண்டும். மேற்படி சிப்பந்திகளுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு 6 மாதம் தொகையினை கணக்கிட்டு தொழில்வரி செலுத்தப்பட வேண்டும். மேலும், மேற்படி நிறுவனத்திற்கான தொழில்வரி, D&O உரிமம் ஆகிய கட்டணங்களையும் தவறாது செலுத்த வேண்டும். அவர்கள் ஒழுங்காக நடத்த தவறிய காரணத்திற்காகிலும் வேறு எந்த காரணத்திற்காகிலும் உரிம காலத்தில் வேலைச் செய்ய கூடாது என ஆணையாளர் தெரிவித்தால் உரிமதாரர் அதற்கு கட்டுப்பட்டு அந்த சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும். ஆணையாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இல்லாமல் மறுபடியும் அவர்களை வேலையில் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

48. உரிமதாரருக்கு கொடுக்கப்படும் அறிக்கைகள், குறிப்பாணைகள் அல்லது உத்தரவுகள் அவரின் கடை வாசஸ்தலத்திற்கு அல்லது தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் போடப்பட்டால் அவரிடத்தில் அது சரியான முறையில் சார்பு செய்ததாகவே கருதப்படும்.

49. எல்லா உரிமையாணை பெற்றவர்களுக்கும் செல்லத்தக்கதாய் இருப்பதுடன் உரிமத்திற்கு இச்சரத்துகள் யாவும் பிரிக்கப்படாத நிபந்தனைகளாக கருதப்படுவதால் இவைகளில் நகல் உரிமம் ஒப்பந்த பத்திரம் அல்லது உடன்படிக்கையுடன் சேர்க்க வேண்டியது அவசியமாக மாட்டாது.

50. தொடர்ந்து வேண்டுமென்றே சிறப்பு அல்லது பொதுக்கட்டுபாடுகளை உரிமதாரர் தவறுவதாக ஆணையாளருக்கு தெரியவந்தால் மேற்படி உரிமத்தை ரத்து செய்ய மன்றத்திற்கு அதிகாரமுண்டு.

51. உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்படும் சொத்துகள் முழுவதையும் உரிம காலம் முடிவு பெற்றவுடன் நல்ல நிலையில்ஒப்புவிக்க வேண்டும். உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்படும் சொத்துக்கள் முழுவதையும் உரிமதாரர் கவனிக்காததினால் சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால்உரிமதாரரே அதற்கு பூரண பொறுப்பாளியாவார். உரிமதாரர் செய்கையினாலாவது அல்லது தப்பிதத்தினாலாவது நகராட்சி சொத்துக்களுக்கு ஏற்படும் சகல மராமத்து செலவுகளையும் உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

52. ஆணையரின் உத்தரவின் பேரில் உரிமையாணை இடங்களில் மாஜிக், சர்க்கஸ் மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டால் அதனால்கிடைக்கும் இதர வாடகையும் வருமானமும் நகராட்சிக்கே சொந்தமானது.

53. மார்க்கெட்டுகளிலும் ஏலம் விடப்படும் இதர உரிமையாணை இடங்களிலும் சேரும் சாணம், குப்பை முதலியவைகளை உரிமதாரர் தனது சொந்த செலவில்அகற்றிட வேண்டும்.

54. உரிமையாணைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இடங்களுக்கு தவிர்த்து வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் எந்த பொருட்களையும் விற்கவோ அல்லது வைக்கவோ கூடாது. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டால்எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமையாணை ரத்துச் செய்யப்படும்.

55. உரிமையாணைதாரர் நாம் வசூலிக்க அனுமதிக்கப்பட்ட கட்டண விகிதத்தை அறிவிப்பு பலகையில்தனது சொந்த செலவில்எழுதி அப்பலகையை எல்லோருக்கும் தெரியும்படியான இடத்தில்அமைத்து பாதுகாத்து வரவேண்டும். அந்த விகிதப்படி கட்டணங்களை வசூலிப்பது உரிமையாணைதாரரின் உரிமையும் பொறுப்பாகும். அதன்படி வசூலிக்க இயலாமல் போனால் உரிமையாணைதாரரே! தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது. அது சம்மந்தமான உரிமையாணைதாரர் மன்றத்தின் பேரில் நஷ்டயீடு கோர உரிமையில்லை.

56. மார்க்கெட்டுகள், ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் இதர உரிமையாணை இடங்களின் யாதொரு விதமான விளம்பரங்கள் அலுவலக உத்திரவின்றி எழுதாமலும், ஒட்டப்படாமலும் உரிமையாணைதாரர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

57. உரிமதாரர் இந்த ஏல அறிக்கையிலுள்ள ஏதாவதொரு நிபந்தனைபடி நடக்கத் தவறினாலும் மேற்படியாரின் உரிமம் உடனே ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும். அதனால்மன்றத்திற்கு ஏற்படும் நஷ்டத்தையும் மற்ற இதர செலவுகளையும் உரிமதாரரால்கட்டப்பட்டு இருக்கும் டேவணித்தொகையிலிருந்தோ அல்லது நகராட்சி ஒப்பந்தகாரரால் கட்டப்பட்டிருக்கும் டேவணியிலிருந்தோ அல்லது

எந்தவகை தொகையிலிருந்தோ ஈடு செய்து கொள்ளவும் மன்றத்திற்கு சொந்தமாக்கி கொள்ளவும் கூடும். மேலே சொன்னபடி நிபந்தனைகளுக்கு அனுசரிக்காததற்கான டேவணியை சொந்தமாக்கிக் கொள்ளும் விஷயத்திலோ அல்லது பணத்தை உளவடைத்துக் கொள்வதோ மன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும். மேற்படி தீர்மானத்தை சிவில்கோர்ட்டில்விவாதிகக உரிமதாரருக்கு உரிமையில்லை.

58. இந்த பொது நிபந்தனைகளில் ஏதாவதொன்றையோ அல்லது சம்மந்தப்பட்ட இனத்தின் கீழ் உள்ள நிபந்தனைகளில்ஏதாவதொன்றையோ உதாசீனம் செய்தால்அப்படி செய்யப்படும் ஒவ்வொரு தடவைக்கும் ரூ.1000/–க்கு மேற்படாமல் உரிமையாணைதாரருக்கு அபாராதம் விதிக்க ஆணையருக்கு அதிகாரம் உண்டு. இதைத்தவிர உரிமையாணையை ரத்து செய்யவும் இலாகா மூலம் நடத்தும் மறுபடியும் ஏலம் விடவும் உரிமை உண்டு. உரிமையாணையை அப்படி ரத்து செய்வதாலும் மறு ஏலம் விடுவதாலும் இலாகா மூலம் நடத்துவதாலும் ஏற்படும் நஷ்டங்களுக்கு உரிமையாணைதாரரே பூரண ஜவாப்தாரியாவார். ஆனால்மேலே சொன்னபடி மறு ஏலத்திலோ இலாகா மூலம் நடத்துவதினாலோ ஏற்படும் லாபத்தில்உரிமையாணைதாரர் எவ்வித உரிமையோ, பங்கோ கேட்க உரிமையில்லை. டேவணியிலிருந்தோ அல்லது மற்ற எந்தவகை தொகையிலிருந்தோ ஈடு செய்து கொள்ளவும் மன்றத்திற்கு சொந்தமாக்கிக் கொள்ளவும் மேலே சொன்னப்படி நிபந்தனைகளை அனுசரிக்காததற்காக டேவணியை சொந்தமாக்கி கொள்ளும் விஷயத்திலோ அல்லது பணத்தை உள்வடைத்துக் கொள்வதோ மன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும். மேற்படி தீர்மானத்தை சிவில்கோர்ட்டில்விவாதிக்க உரிமதாரருக்கு உரிமையில்லை.

59. உரிமதாரர் கட்டப்பட்டிருக்கும் வைப்பு தொகையிலிருந்து விதிக்கப்படும் அபராதத்திற்கு முழு பாகத்தையோ உள்வடைத்துக் கொள்ளலாம். அப்படி உள்வடைத்துக் கொள்ளப்படும் தொகையை உத்தரவு கிடைத்த ஒருவார கெடுவிற்குள் உரிமைதாரர் மறுபடியும் வைப்புத் தொகையாக கட்டிவிட வேண்டியது. தவறினால்மேற்படி தொகை உரிமபாக்கி வசூலிக்கப்படுவது போல்வசூலிக்கப்படும்.

60. உரிமம் சம்மந்தமாக ஏற்படும் பாக்கி தொகைகளை உரிமதாரருக்கு நகராட்சியிலிருந்து கிடைக்க வேண்டிய இதர எந்த தொகையிலிருந்து ஒப்புதல் ஏதுமின்றி உள்வடைத்துக் கொள்ள மன்றத்திற்கு அதிகாரமுண்டு.

61. உரிமம் இடத்தில்எவ்வித பிராணிகளையும் கட்டவோ, வளர்க்கவோ கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது. மீறும் உரிமதாரர்களுக்கு ஆணையாளர் அவர்களால்அபராதம் விதிக்கப்படும்.

62. எதிர்பாராதவிதமாக ஏற்படும் புயல், காற்று, வெள்ளம், கலகம், தீ, விபத்து, தொற்றுநோய்ஆகிய காலங்களில்தற்காலிக உரிம தலத்தை மூடச் சொல்வதற்கு ஆணையாளருக்கு உரிமையுண்டு. அப்படிப்பட்ட காலத்திற்கு உரிமம் பெற்றவருக்கு ஏற்படக்கூடிய பொருள் இழப்பிற்கோ கட்டண வருவாய் குறைவிற்கோ அல்லது வேறு எந்த நஷ்டத்திற்கோ யாதொருவிதமான ஈடும் நகராட்சியிலிருந்து கோர உரிமதாரருக்கு உரிமையில்லை.

63. நகராட்சி உரிம இடங்களுக்கு உரிமத் தொகை செலுத்தாமல் இருந்தாலும், உரிமதாரருக்கு அறிவிப்பு கொடுக்கப்படாமலேயே ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராவது மேற்படி இடம் பூட்டப்பட்டிருந்தாலும், பூட்டை உடைத்து அல்லது வேறு விதத்திலாவது இடங்களில் நுழைந்து அதனுள் உள்ள சொத்தை கைப்பற்றிக் கொண்டு நகர்மன்றத்தால் வசூல் ஏற்பாடு செய்ய அதிகாரம் உண்டு. அவ்வாறு கைப்பற்றியதால் ஏற்படும் செலவுகள் அல்லாத நஷ்டத்தை ஏல சரத்துக்களின்படி நடத்த தவறிய உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

64. உரிம காலத்தில் மதுபானம் மற்றும் அரசினால் தடை செய்யப்பட்ட வகையறாக்கள் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டாது.

65. உரிமம் சம்மந்தப்பட்ட இடம் அல்லது இதர சொத்துக்களை ஒப்படைப்பதில் உரிமம் தொடங்கும் தேதியில் உரிமதாரருக்கு ஒப்புவிக்க தாமதமோ தடையோ ஏற்பட்டால் அதனால் உரிமம் ரத்தாகாது. தாமதிக்கும் கால அளவிற்கு உரிம விகிதம் தொகையை மன்றம் முடிவு செய்யும் அளவிற்கு தள்ளுபடி செய்து கொடுப்பதைத் தவிர நஷ்டத்திற்கு நகர்மன்றம் பொறுப்பேற்கப்படமாட்டாது.

66. குத்தகை உரிமத்திற்கான விதிமுறை நடைமுறை மற்றும் இதர காரணங்களினால் நகராட்சி நிர்வாகம் குத்தகைதாரர்களுடைய குத்தகை தொடர அனுமதிக்க வேண்டாம் என கருதினால் இதற்காக நகர்மன்றம் ஒப்புதலுடன் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும். மேற்குறித்த காரணங்கள் ஏதாவது ஒன்றிற்கு குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டால்குத்தகை உரிமம் ரத்து செய்வதற்கான உத்தரவு அளிக்கப்பட்டவுடன் மேற்படி கடையை நகராட்சி வசம் குத்தகையை ஒப்படைக்க வேண்டும். மேற்படி குத்தகை உத்தரவை குத்தகை ரத்தானவர் வாங்க மறுத்தால்மேற்படி உத்தரவு அதற்குரிய கடையில்நகராட்சி அலுவலரால்ஒட்டப்படும். அவ்வாறு நகராட்சி பணியாளர்களால் அறிவிப்பு ஒட்டப்படுவதே குத்தகைகாரரிடம் நேரடியாக சார்பு செய்வதற்கு சமமாகும்.

67. குத்தகை ரத்து செய்யப்பட்டவர் மேற்படி குத்தகையை நகராட்சி வசம் ஒப்படைக்க மறுத்தால் நகராட்சியின் உரிய அதிகாரம் பெற்றவரால்மேற்படி குத்தகையை நகராட்சி தன் வசப்படுத்திக் கொள்ளும்போது தாங்கள் குத்தகை அனுபவித்து கொள்ளும் அளவிற்கு நகராட்சி பொறுப்பும் ஏற்காது, எந்தவித இழப்பு தொகையையும் அளிக்காது.

68. 2025–2026, 2026–2027, 2028–2029–ம் ஆண்டுகளில் குத்தகை இனம் முழு தொகையில் வருமான வரி (ICS) வருமானவரித்துறை (Income Tax Office) – யாரால் நிர்ணயிக்கப்படும் சதவிகிதத் தொகையினை குழித்துறை நகராட்சி கருவூலத்தில்செலுத்தப்பட வேண்டும். வருமான வரித் தொகையில் ஏதேனும் விடுதல்விடுப்பட்டிருந்தால் விடுதல் தொகையையும் ஏல உரிமதாரர் செலுத்த வேண்டும். இதன் பின்னர் தான் இவ்வினக் குத்தகைக்கான உரிமையாணையை ஊர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

69. முதலாம் ஆண்டு முடிவில் இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகை (முதலாம் ஆண்டுக் குத்தகைத் தொகையுடன் 5 % தொகையினை சேர்த்து) ஒரே தவணையாக (முந்தைய நிதியாண்டு) பிப்ரவரி 28–க்குள் செலுத்தி உரிமம் புதுப்பிக்க வேண்டும். இரண்டாம் ஆண்டின் முடிவில் இரண்டாம் ஆண்டிற்கான

குத்தகை தொகையுடன் 5% தொகையினை சேர்த்து ஒரே தவணையாக செலுத்தி மூன்றாம் ஆண்டிற்கான உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

70. உரிமை அல்லது உரிமையாணைக் காலத்தில்உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் முழுமையும் அல்லது எந்த பாகமாவது நகராட்சிக்குத் தேவையானால் உரிமதாரர் எவ்வகை தடையுமின்றி எந்தவித நஷ்ட ஈட்டுத்தொகையும் கோராமல் நகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இதில்நகர்மன்ற தீர்மானமே முடிவானதாகும். சந்தையை அல்லது சந்தையில் உள்ள கடைகளை நகராட்சி திருத்தி அமைக்கவோ, செப்பனிடவோ செய்யும் செயல்களினால் உரிமையாணை பெற்றவருக்கு ஏற்படும் வணிகக் குறைவிற்கோ, கேட்டிற்கோ யாதொரு நஷ்ட ஈடும் கேட்க அவருக்கு உரிமையில்லை.

71. உரிமம் அல்லது உரிமையாணை இடத்தில்எழுத்து மூலமாக உரிய ஒப்புதல்பெறப்பட்டிருந்தாலொழிய எவ்வகை மாறுதலாவது அல்லது புதிய கட்டிட வேலையாவது செய்யக்கூடாது. ஆனால்நகராட்சியின் மூலம் எவ்வகை மாறுதலும் செய்ய உரிமையுண்டு. அதை தடுக்க உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

72. ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக உரிமையாணை பெற்ற இடத்தை அந்தக் குறிப்பிட்ட காரியத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். நகராட்சியால்அனுமதி வழங்கப்படாத தொழில் ஏதும் செய்யக்கூடாது. மேலும் அரசால்தடை செய்யப்பட்ட தொழில்கள் ஏதும் நடத்தல்கூடாது.

73. உரிமையாணை பெற்றவர் தாம் உரிமையாணையையோ அல்லது உரிமத்தையோ மற்றவர்களுக்கு மாற்றவோ அல்லது விற்று விடவோ கூடாது. மேலும் அவைகளை வேறு யாருக்கும் உரிமை மாற்றிக் கொடுக்கவோ அல்லது உள் வாடகைக்கு விடவோ கூடாது. இதை மீறி செய்பவர்களை கட்டிடங்களிலிருந்து அப்புறப்படுத்தி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை உடனடியாக ரத்து செய்யப்படும். இதனால் நகராட்சிக்கு ஏற்படும் சகல நஷ்டங்களையும் அன்னாரிடமிருந்து வசூலிக்கப்படும். மேலும் அன்னார் மீது வழக்கும் தொடரப்படும். மேற்படி வகைக்கு நகராட்சியிலிருந்து எவ்வித நஷ்டஈடும் கேட்க உரிமதாரருக்கு உரிமை கிடையாது.

74. எல்லா உரிமதாரர்களும் வியாபாரம் சம்மந்தமான கணக்குகளை அவரவர்களின் பெயரில்தான் வைக்க வேண்டும். வியாபாரம் சம்மந்தமாக பெறும் பல்வேறு இலாகா சம்மந்தப்பட்ட அனுமதிகளையும், உரிமங்களையும் தொழில்வரி, வருமானவரி, விற்பனைவரி, சேவைவரி போன்ற எல்லா வரிகளையும் அவர்கள் பெயரிலே நிலுவையின்றி செலுத்தி அதற்கான சான்றாவணங்களை தங்கள் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

75. உரிமதாரர் தன் சொந்த பொறுப்பிலும், செலவிலும் அட்டவணையில் கண்ட தொகையை வசூல்செய்து கொள்ள வேண்டியது. வழக்குகள் ஏற்பட்டோ அதன் தீர்ப்பின்படியே தொகைகளை வசூல்செய்ய இயலாமல் போனாலும் நகராட்சி எவ்வித நஷ்டத்திற்கும் பொறுப்பு ஏற்காது. அட்டவணையில் கண்டபடி வசூல்செய்ய சட்டப்படி நடவடிக்கை எடுக்க உரிமைதாரருக்கு முழு உரிமை உண்டு. அரசாங்க கணக்கு தணிக்கை செய்வோர் ஏதாகிலும் தொகையை உரிமைதாரரிடம் வசூலிக்கும்படி ஆணையிட்டால் அந்ததொகையை

செலுத்துவதற்கு உரிமைதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் கட்டுப்பட்டவராவார்.

76. இந்த அறிக்கையில்கண்டுள்ள கட்டுபாடுகளின் அடிப்படையில் உரிமையாணை பெற்றவர் நடக்கத்தவறினால் உரிமையைத் தாமாகவே நிறுத்திக் கொண்டதாகக் கருதப்படும். மேலும் இதன் விளைவாக ஏற்படும் எல்லா பொருட்களையும் அவர் கட்டியிருக்கும் பொறுப்புத் தொகையிலிருந்தோ மற்றெந்த வகையிலோ முழுவதையுமோ பகுதியையுமோ ஈடு செய்து கொள்ள நகர்மன்றத்திற்கு அதிகாரமுண்டு. ஒப்பந்தக் கட்டுப்பாடுகளின்படி செயல்படாத குற்றத்திற்கு பொறுப்புத் தொகையை பறிமுதல்செய்ய நகர்மன்றத் தீர்மானமே முடிவானதாகும்.

77. உரிமம் அல்லது உரிமையாணையை ரத்து செய்து மறுஏலம் கோருவதற்கும் நகராட்சி ஆட்களைக் கொண்டே உரிமம் அல்லது உரிமையாணை பெற்று வேலையை நடத்துவதற்கும் நகர்மன்றம் உரிமையுடையதாகவும், அவ்வண்ணம் ரத்து செய்து மறு ஏலம் போடுவதாலும் நகராட்சி ஆட்களைக் கொண்டு நடத்துவதாலும் ஏற்படும் செலவுகளுக்கும், நஷ்டங்களுக்கும் உரிமதாரரே பொறுப்பாளியாவதுடன் அவருடைய பொறுப்புத் தொகையை எந்தக் காலத்திலும் பறிமுதல் செய்து கொள்வதற்கும் இணங்கியவராவார். அப்படி மறுஏலத்திலோ நகராட்சியால் நடத்துவதாலோ ஆதாயம் ஏற்படின் அதில் பங்கு பெற உரிமதாரருக்கோ அல்லது உரிமையாணை பெற்றவருக்கோ உரிமையில்லை.

78. உரிமதாரருக்கு அல்லது உரிமையாணை பெற்றவருக்கு விதிக்கும் அபராதங்கள் அல்லது அவரிடமிருந்து வரவேண்டிய பாக்கிகள் முதலியவற்றை உரிமதாரரால் உடனுக்குடன் செலுத்தப்பட வேண்டும். தவறினால், அறிவிப்பின்றி அவர் செலுத்தவிருக்கும் வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்துக் கொள்ளப்படும். அப்படி ஈடுசெய்து கொண்ட விவரத்தை தெரிவித்த தேதியிலிருந்து ஒருவார கெடுவிற்குள் ஈடு செய்த தொகையை கட்டிவிட வேண்டும். தவறினால் மேற்படி ஈடு செய்த தொகையை உரிமம் தொகையில் நிலுவை நின்றதாக கருதி உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

79. உரிமம் அல்லது உரிமையாணை பெற்றவர்கள் குறிப்பிட்ட இடம் தவிர மற்ற எந்த இடத்திலும் குறிப்பாக உரிம இடங்களின் முன்னாலும் வெளிப் பக்கங்களிலும் நடைவழிப்பாதைகளில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்து இடையூறு ஏற்படுத்தக் கூடாது. கடைகளுக்கு முன்னாலோ, பின்னாலோ, பக்கவாட்டிலோ எந்த விதமான தன்அமைப்புகள் அமைத்தோ வேறு வழியிலோ பொருட்களை தொங்க விடவோ, பொருட்களை விற்பனைக்கு வைக்கவோ, விளம்பரப்படுத்தவோ கூடாது அவ்விதம் மீறி நடந்தால்முன் அறிவிப்பின்றி அவைகளை துறை மூலம் அப்புறப்படுத்தி அவைகளை ஏலம்விட ஆணையர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

80.பொது நிபந்தனைகளில் குறிப்பிட்டபடி அபராதம் விதிக்கப்படும். அவ்வகையில் உரிமதாரருக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதை நகர்மன்றத்திடம் கேட்க உரிமை கிடையாது. நிரந்தர அமைப்புக்கள் அமைத்தல், தற்காலிகமாகத் தட்டிகள் அமைத்தல்போன்ற எந்தவிதமான ஆக்கிரமிப்புகளும் உரிமம் அல்லது உரிமைகளை பெற்ற இடத்தை சுற்றி செய்யக்கூடாது. இந்த நிபந்தனைகளை

எந்தவிதத்திலாவது மீறியவர்களின் உரிமையாணை அல்லது உரிமம் ரத்து செய்யப்படும்.

81. உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்பட்ட சொத்துக்களின் ஏதாவது சேதங்கள் ஏற்பட்டிருந்தால்நகர்மன்றம் செயல்படுகிற தீர்மானப்படியுள்ள நஷ்ட ஈட்டை (Compensation) உரிமதாரர்கள் செலுத்திவிட வேண்டும். இது தொடர்பாக நகர்மன்றத் தீர்மானமே முடிவானது. மேலும் உரிமதாரர்கள் உரிமம் காலக்கெடு முடிவடைந்தவுடன் மேற்படி இடத்தை காலி செய்து மேற்படி சொத்துக்களையும் அதில் உள்ள பொருட்களையும் நகராட்சியிடம் நல்ல நிலைமையில் ஒப்புவித்து விட வேண்டும். தவறினால் உரிமதாரர் சொத்தை உரிமை கொள்வதோடு அதனால் நகராட்சிக்கு ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் உரிமைதாரரே பொறுப்பாவார். எக்காரணத்தைக் கொண்டும் உரிமதாரர் ஒப்புக்கொண்ட உரிமையை திரும்ப ஒப்படைக்க (Surrender) உரிமை கிடையாது. அப்படித் திரும்ப ஒப்படைக்க விரும்பினால் நகராட்சி எந்தவித நஷ்டஈடும் வழங்காது. மேலும், அதனால் ஏற்படும் பணிப்பொருள் இழப்புகளுக்கும் உரிமைதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

82. உரிமையாணை காலம் முடிந்தவுடன் நகராட்சி இடங்களை நகராட்சிக்கு ஒப்புவிக்கத் தவறினால் உரிமையாணை பெற்றவரது ஒப்புதல் இல்லாமல் நகராட்சியால் பொறுப்பு எடுக்கப்படும். மேற்படி கட்டிடங்களின் சுவர்களுக்காவது, கீழ் நிலத்திற்காவது அல்லது நகராட்சிப் பொருட்களுக்காவது ஏதேனும் கேடு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் செலவுகள் உரிமையாணை பெற்றவரிடமிருந்து வசூலிக்கவும், நகர்மன்றத்திற்கு முழு உரிமை உண்டு.

83. வருமானவரி, ஆடம்பர வரி, சேவை வரி, தொழில்வரி மற்றும் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய இதர வரிகளை உரிமைதாரரே செலுத்த கடமைப்பட்டுள்ளார்.

84. நகராட்சியின் எழுத்து மூலமான உத்தரவை முன்னதாக பெறாமல் உரிமம் பெற்றவர் உரிமையாணையை இன்னொருவருக்கு மாற்றவாவது அல்லது உள் உரிமத்திற்கு கொடுத்தால் ஏலதாரர் கட்டியிருக்கும் வைப்புத் தொகையை நகர்மன்றத்துக்கு ஆதாயமாக்கிக் கொள்வதுடன் உரிமையாணையை ரத்து செய்து அந்த இடம் இந்த உரிமம் பெற்றவர் சொந்த பொறுப்பில் மறுஏலம் விடப்படும். இதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் இவரே பூரண பொறுப்பாளியாவதுடன் இந்த நஷ்டங்களை ஈடு செய்யவும் கட்டுப்பட்டவராவார்.

85. ஏல அறிவிப்பில் அல்லது ஒப்பந்த பத்திரத்தில் இருக்கும் வார்த்தைகளுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு நகராட்சி ஆணையாளர் அவர்களால் கொடுக்கப்படும் விளக்கமே முடிவானதாகும். இந்த அறிக்கையில் கண்ட கட்டுபாடுகளுடன் வேறு எந்த கட்டுபாடுகளை சேர்க்கவோ மாற்றவோ ஆணையாளருக்கு உரிமையுண்டு.

86. ஆணையாளர் மற்றும் அவரது அலுவலர்களுக்கும் நிர்வாகத்தின் அவசியத்தை முன்னிட்டு அவ்வப்போது கொடுக்கும் உத்தரவுகளின்படி நடந்து வர உரிமதாரர் கட்டுபட்டவராவார்.

87. உரிமையாணை ஆணையர் அல்லது மேற்படியாரின் அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வைக்கும் கட்டுபாட்டிற்கும் உட்பட்டதாகும்.

88. இந்த விளம்பரத்தில்கண்டுள்ள யாதொரு நிபந்தனைகள் சட்டதிட்டங்கள் விதிக்க அரசு ஆணைகள் இதர ஆணைகள் மற்றும் இவை அனைத்தும் சம்மந்தமாகவும் ஆணையர் கொடுக்கும் விளக்கமே முடிவானது.

89. உரிமம் அல்லது உரிமையாணையில்ஏற்படும் எந்த சிக்கல்கள், பொது சிறப்பு கட்டுப்பாடுகள் குறித்தும் உரிம ஒப்பந்த பத்திரத்தில்எந்த சொல்அல்லது வாக்கியத்தின் பொருள் பற்றியும் ஆணையர் அவர்களின் தீர்ப்பும் விளக்கமும் முடிவானது. உரிமதாரர் அதற்குக் கட்டுபட்டு நடக்க வேண்டியவராவார்.

90.உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கும் அவருடைய அதிகாரம் பெற்ற பணியாளர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டு நடக்க வேண்டும். உரிமம் அல்லது உரிமை இடங்களில் ஆணையரோ அல்லது அன்னாரின் அனுமதி பெற்றவர்களோ உரிமதாரர் அல்லது உரிமை பெற்றவரின் முன் அனுமதி பெறாமல்எந்த நேரத்திலும், எத்தனை தடவைகளும் உரிமை அல்லது உரிமையிடத்தில்நுழையவோ, நுழைந்து பரிசோதனைகள் செய்யவோ மின் இணைப்புகளை துண்டிக்கவோ உரிமை உண்டு. ஆணையர் அவர்களால் அவ்வப்போது அனுப்பப்படும் ஆணை உரிமதாரர் அல்லது உரிமை பெற்றவர் கட்டுப்பட்டவராவார்.

91. எவ்வித முன்னறிவிப்பின்றி இந்த அறிவிக்கையில் கண்ட கட்டுபாடுகளுடன் வேறு எந்த கட்டுப்பாட்டைச் சேர்க்கவும் அல்லது மேற்படி கட்டுபாடுகளில் மாற்றம் செய்ய நகர்மன்றத்திற்கு எல்லா உரிமை உண்டு. அவ்வித மாற்றத்திற்கு உரிதாரர் கட்டுப்பட்டவராவார்.

92. உரிமயாணைதாரர் என்று வரும் இடங்களில்லை சென்ஸ்தாரர் என்ற முறையே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

93. ஏலம் வரும் இடங்களில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

94. ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புத் தொகை மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்றிதழை 01–04–2018 முதல் 37 மாதங்களுக்கு வரும்படி (அதாவது உரிமம் ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 37 மாதங்கள்) ஆணையர் குழித்துறை நகராட்சி என்ற பெயரில் முன்னதாகவே செலுத்தியிருந்தாலொழிய ஏலம் கோர யாருக்கும் அனுமதி கோரப்பட மாட்டாது. நகராட்சியில் வேலை செய்வதற்காகவோ, சாமான்கள் வாங்குவதற்காகவோ மற்றும் இதர காரியங்களுக்காகவோ செலுத்திய வைப்புத் தொகையினை இந்த ஏலத்திற்கான வைப்புத் தொகைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

95. உரிமைதாரருக்கு இந்நகராட்சியின் உரிமத்திற்காக ஒப்படைக்கப்படும் கட்டிடங்கள் அல்லது சொத்துகளின் பேரில் எவ்வித பாத்தியமோ அல்லது தமிழ்நாடு வாடகை கட்டுபாடு சட்டம் மற்றும் விதிகளின்படி வாடகை பாத்தியமோ தமிழ்நாடு குத்தகை பாதுகாப்பு சட்டம் மற்றும் விதிகளின்படி குத்தகைதாரர் பாத்தியமோ கிடையாது.

96. இந்த அறிக்கையில் கண்டிருக்கும் எல்லா உரிமை ஆணைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் ஏல காலத்தில்கட்டப்படும் பொறுப்புத்தொகையை அந்தந்த உரிமையாணை பெற்றவருக்கு கணக்குகள் முழுவதும் தணிக்கையான

பிறகுதான் திருப்பி தரப்படும். தணிக்கையில் ஏதாவது தொகை பிடிக்க நேர்ந்தால் அதை பிடித்தம் செய்து கொண்டு மீதி தான் திருப்பி கொடுக்கப்படும்.

97. கடைகளுக்கு மாத வாடகை பிரதி மாதம் 5 மற்றும் மே 5 தேதிக்குள் செலுத்த வேண்டும். மேற்படி குறிப்பிட்ட நாளில் தொகை செலுத்த தவறினால் தவறிய நாள் முதற்கொண்டு செலுத்தப்படும் தேதி வரை 18ரூ வீதம் அபராத வட்டி சேர்த்து உரிமை தொகையுடன் செலுத்த வேண்டும். அரசாணை நிலை எண்.26 (ந.நி.ம.கு.வ.து) நாள் 28-01-1994 வட்டி வீதம் அவ்வப்போது அரசு ஆணைப்படி கூட்டவோ குறைக்கவோ செய்யப்படும்)

98. சமணபகவான் மகாவீரர் சுவாமி அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் நிமித்தம் ஆட்டடி சாலைகள், கசாப்பு கடைகள், மீன் கடைகள் ஆகியவற்றை ஏப்ரல்மாதம் 3-ம் தேதியும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2-ம் தேதியும் திருவள்ளுவர் தினத்தன்று வடலூர் ராமலிங்கம் நினைவு நாளன்றும் மற்றும் அரசின் உத்தரவிடும் நாட்களில் மூடிவிட வேண்டும். இதற்கு எந்தவித நஷ்டஈடும் கோரக்கூடாது.

99. ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்தரவு பெற்ற 5 தினங்களுக்குள் ரூ.100/- மதிப்புள்ள முத்திரை காகிதத்தில் உரிமைதாரர் நகராட்சியின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன். எனவும் நகராட்சிக்கு எதிராக எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடர மாட்டேன் எனவும் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும்.

**(ந.க.எண்:0033/2025/அ2)**

**<u>அ.கு:</u>**

மன்றம் முடிவு செய்யலாம்.

## மன்ற தீர்மானம் எண் 480

## மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:6</u>**

பத்மநாபபுரம் நகராட்சிக்கு உட்பட்ட டவுன் ஹால், மருந்துக்கோட்டையில் உள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றின் பராமரிப்பு பணி செய்ய மதிப்பீடு கேட்டதின் அடிப்படையில் மேற்படி பணிக்காக மதிப்பீடு, வரைபடம் மற்றும் 3D Elevation ஆகியவை தனியார் நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டது. அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.65,500/- ஆகும். எனவே தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:436/2025/E1)**

**<u>அ.கு:</u>**

பணியின் அவசர அவசியம் கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏர்க்கலாம்.

## மன்ற தீர்மானம் எண் 481
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:7</u>**

பத்மநாபபுரம் நகராட்சிக்கு உட்பட்ட டவுன் ஹால், மருந்துக்கோட்டையில் உள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றின் பராமரிப்பு பணி செய்ய மதிப்பீடு கேட்டதின் அடிப்படையில் மேற்படி பணிக்காக மதிப்பீடு, வரைபடம் மற்றும் 3D Elevation ஆகியவை தனியார் நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டது. அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.65,500/– ஆகும். மேலும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு இந்நகர் மன்றத்தின் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, 13/10/2025ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | RK CONSTRUCTION,<br>Eraniel Jn, Kandavilai, (PO) | விலைப்புள்ளி தொகை ரூ.80,000/– (அதிகம்) |
| 2. | JOSE CONSTRUCTION,<br>PEYANKUZHI, KARANKADU (PO) | விலைப்புள்ளி தொகை ரூ.72,000/– (அதிகம்) |
| 3. | RATHEE CONSTRUCTION,<br>ThingalNakar, Neyyoor (PO) | விலைப்புள்ளி தொகை ரூ.65,500/– (குறைவு) |

**<u>அ.கு:</u>**

1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டினை காட்டிலும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள RATHEE CONSTRUCTION, நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்:436/2025/E1)**

## மன்ற தீர்மானம் எண் 482
மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:8</u>**

பத்மநாபபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அரசு பள்ளிகள் 6 எண்ணம் மற்றும் 6 எண்ணம் அங்கன் வாடிகள் ஆகியவற்றினை பராமரிப்பு பணி செய்ய மதிப்பீடு கேட்டதின் அடிப்படையில் மேற்படி பணிக்காக மதிப்பீடு, வரைபடம் ஆகியவை தனியார் நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டது. அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.48,000/– ஆகும். எனவே தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:436/2025/E1)**

**<u>அ.கு:</u>**

பணியின் அவசர அவசியம் கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏர்க்கலாம்.

## மன்ற தீர்மானம் எண் 483

## மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:9</u>**

பத்மநாபபுரம் நகராட்சிக்கு உட்பட்ட அரசு பள்ளிகள் 6 எண்ணம் மற்றும் 6 அங்கன் வாடிகள் ஆகியவற்றினை பராமரிப்பு பணி செய்ய மதிப்பீடு கேட்டதின் அடிப்படையில் மேற்படி பணிக்காக மதிப்பீடு, வரைபடம் ஆகியவை தனியார் நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டது. அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.48,000/– ஆகும். மேலும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு இந்நகர் மன்றத்தின் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, 13/10/2025ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | RK CONSTRUCTION,<br>Eraniel Jn, Kandavilai, (PO) | விலைப்புள்ளி தொகை ரூ.80,000/– (அதிகம்) |
| 2. | JOSE CONSTRUCTION,<br>PEYANKUZHI, KARANKADU (PO) | விலைப்புள்ளி தொகை ரூ.65,000/– (அதிகம்) |
| 3. | RATHEE CONSTRUCTION,<br>ThingalNakar, Neyyoor (PO) | விலைப்புள்ளி தொகை ரூ.48,000/– (குறைவு) |

**(ந.க.எண்:436/2025/E1)**

**அ.கு:**

1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டினை காட்டிலும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள RATHEE CONSTRUCTION, நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

## மன்ற தீர்மானம் எண் 484

## மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப்பொருள்:10**

பத்மநாபபுரம் நகராட்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த உயர் நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்:WP (MS) No:103076/2019– மீதான நாள்:11/12/2024ன் படி சொத்து புல எண்:138–191–1ல் அமைந்துள்ள க.எண்:12/64Eல் கட்டிடத்தினை 22/07/2025ம் தேதியில் பத்மநாதபுரம் சார்பு நீதிபதி அவர்கள் முன்னிலையில் பொதுப்பணித்துறை வட்டாட்சியர், நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு அலுவலர் ஆகியோர் இடத்தினை அளவீடு செய்து மாண்பமை பத்மநாபபுரம் சார்பு நீதிபதி அவர்கள் இந்நகராட்சி சார்பில் கட்டிட அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள பகுதியினை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த நேரில் தெரிவிக்கப்பட்டதின் படி மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 லட்சம் ஆகும். எனவே தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:3356/2015/TPI)**

**அ.கு:**

பணியின் அவசர அவசியம் கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏர்க்கலாம்.

## மன்ற தீர்மானம் எண் 485

## மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:11</u>**

பத்மநாபபுரம் நகராட்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த உயர் நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண்:WP (MS) No:103076/2019– மீதான நாள்:11/12/2024ன் படி சொத்து புல எண்:138–191–1ல் அமைந்துள்ள க.எண்:12/64Eல் கட்டிடத்தினை 22/07/2025ம் தேதியில் பத்மநாதபுரம் சார்பு நீதிபதி அவர்கள் முன்னிலையில் பொதுப்பணித்துறை வட்டாட்சியர், நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு அலுவலர் ஆகியோர் இடத்தினை அளவீடு செய்து மாண்பமை பத்மநாபபுரம் சார்பு நீதிபதி அவர்கள் இந்நகராட்சி சார்பில் கட்டிட அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ள பகுதியினை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த நேரில் தெரிவிக்கப்பட்டதின் படி மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 லட்சம் ஆகும். மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு இந்நகர் மன்றத்தின் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, 10/10/2025ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.CK.ராகேஷ்,<br>மணலி. | மதிப்பீட்டைக் காட்டிலும் 1.96% அதிகம் |
| 2. | திரு.A. ஜெஸ்டின் ஜோஸ்,<br>பள்ளியாடி. | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07% குறைவு |

**(ந.க.எண்:3356/2015/TPI)**

**<u>அ.கு:</u>**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினை காட்டிலும் 0.07% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.A.ஜெஸ்டின் ஜோஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

## மன்ற தீர்மானம் எண் 486

## மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:12</u>**

பத்மநாபபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்:13ல் தக்கலை மெயின் சாலையில் அமைந்துள்ள பிரபா பேக்கரி அருகில் வடக்கு புறத் தெருவில் உள்ள குடிநீர் விநியோக குழாயில் கழிவு நீர் புகுந்துள்ளதால் அப்பகுதி முழுவதும் குடிநீர் குழாயில் சாக்கடை நீர் கலந்து வருகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளதால் குழாயினை மாற்றி புதிய குடிநீர் விநியோக குழாய் அமைப்பதற்கும் மற்றும் அப்பாதையினையும் செப்பனிடவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 லட்சம் ஆகும். எனவே தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:030/2025/E1)**

**<u>அ.கு:</u>**

பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏர்க்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 487**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்:13</u>**

பத்மநாபபுரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்:13ல் தக்கலை மெயின் சாலையில் அமைந்துள்ள பிரபா பேக்கரி அருகில் வடக்கு புறத் தெருவில் உள்ள குடிநீர் விநியோக குழாயில் கழிவு நீர் புகுந்துள்ளதால் அப்பகுதி முழுவதும் குடிநீர் குழாயில் சாக்கடை நீர் கலந்து வருகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளதால் குழாயினை மாற்றி புதிய குடிநீர் விநியோக குழாய் அமைப்பதற்கும் மற்றும் அப்பாதையினையும் செப்பனிடவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 லட்சம் ஆகும். மேலும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு இந்நகர் மன்றத்தின் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, 15/10/2025ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.CK.ராகேஷ்,<br>மணலி. | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.02% அதிகம் |
| 2. | C.சந்திரசேகர்,<br>திக்கணங்கோடு. | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01% குறைவு |

**(ந.க.எண்:030/2025/E1)**

**அ.கு:**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினை காட்டிலும் 0.01% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதியும், கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 488**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**மன்றப்பொருள்:14**

பத்மநாபபுரம் நகராட்சியில் வார்டு எண்: 1 முதல் 21 வரை உள்ள வார்டுகளில் புதிதாக (LED) மின்விளக்கு மற்றும் Street light controller அமைக்க கோரி 27/10/2025, 28/10/2025 மற்றும் 29/10/2025 ஆகிய தேதிகளில் நடைபெற்ற வார்டு சபா கூட்டத்தில் பொதுமக்கள் மனு அளித்துள்ளனர். அதன்படி மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**(ந.க.எண்:2656/2025/E1)**

**அ.கு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 489**
**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**மன்றப்பொருள்:15**

பத்மநாபபுரம் நகராட்சியில் சிறப்பு வார்டு சபா கூட்டம் 27/10/2025ம் தேதியில் நடை பெற்றதில் அப்பகுதி பொதுமக்கள் கீழ் கண்ட பணிகள் செய்து தரக்கோரி மனு அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்யப்பட்டடு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகைக்கு நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேற்படி பணிகளின் விபரம் கீழ் கண்டவாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | வார்டு எண்:2ல் மணலி ரோடு முதல் போட்டக்குளம் வரை மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 5,00,000/- |
| 2. | வார்டு எண்:2ல் மணலி டிரா கடை முதல் ஞாறவள்ளிக் குளம் வரை மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 2,00,000/- |
| 3. | வார்டு எண்:3ல் டிரா ரோட்டில் சேதம் அடைந்த அலங்கார கற்களை சீரமைக்கும் பணி. | 2,50,000/- |
| 4. | வார்டு எண்:4ல் மக்கப்பாளையம் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 2,50,000/- |
| 5. | வார்டு எண்:5ல் சரோட்டில் FII-58 மின்கம்மத்தின் எதிரில் உள்ள சாலை சீரமைக்கும் பணி. | 1,00,000/- |
| 6. | வார்டு எண்:5ல் வெட்டிக்கோணம் தெருவில் உள்ள FI-14 மின்கம்மத்தின் எதிரில் உள்ள சாலை சீரமைக்கும் பணி. | 2,00,000/- |
| 7. | வார்டு எண்:6ல் ஏ.பி.எம் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 1,20,000/- |
| 8. | வார்டு எண்:6ல் ஏ.பி.எம் தெருவில் உள்ள இறைச்சிக்கடை அருகில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 2,00,000/- |
| 9. | வார்டு எண்:7ல் வாழவிளை பகுதியில் முடிகளுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 4,50,000/- |

**(ந.க.எண்:2424/2025/E1)**

**அ.கு:**

பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும், மேற்படி பணிக்கு ஆகும் செலவின தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 490**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:16</u>**

பத்மநாபபுரம் நகராட்சியில் சிறப்பு வார்டு சபா கூட்டம் 28/10/2025ம் தேதியில் நடை பெற்றதில் அப்பகுதி பொதுமக்கள் கீழ் கண்ட பணிகள் செய்து தரக்கோரி மனு அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்யப்பட்டடு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகைக்கு நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேற்படி பணிகளின் விபரம் கீழ் கண்டவாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | வார்டு எண்:8ல் செட்டித்தெருவில் கொத்தளம் பகுதியில் உள்ள படிக்கட்டுகளை சப்பாத்தாக மாற்றி அமைக்கும் பணி. | 75,000/– |
| 2. | வார்டு எண்:10ல் செட்டித்தெருவில் முடக்குளம் அம்மன் கோவில் பின்புறமுள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 2,50,000/– |
| 3. | வார்டு எண்:10ல் முடக்குளம் பகுதியில் உள்ள கதவு எண்:33/106K வீட்டின் அருகில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 1,00,000/– |
| 4. | வார்டு எண்:10ல் முடக்குளம் பகுதியில் உள்ள கதவு எண்:35/88A வீட்டின் அருகில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 1,00,000/– |
| 5. | வார்டு எண்:11ல் அரசுவிளை பகுதியில் உள்ள சாலை சீரமைக்கும் பணி. | 1,50,000/– |
| 6. | வார்டு எண்:11ல் அரசுவிளை பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 1,00,000/– |
| 7. | வார்டு எண்:12ல் சந்தை முன்பகுதியில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகளை பராமரிப்பு செய்யும் பணி. | 5,00,000/– |
| 8. | வார்டு எண்:12ல் கோனார்விளை பகுதியில் உள்ள அலங்கார கற்கள் சீரமைக்கும் பணி. | 1,50,000/– |
| 9. | வார்டு எண்:12ல் பழுதான நிலையில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 2,00,000/– |
| 10. | வார்டு எண்:14ல் மெட்டுக்கடை ஜங்சன் முதல் பறையங்கால் வரை உள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 3,50,000/– |

**(ந.க.எண்:2393/2025/E1)**

**<u>அ.கு:</u>**

பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும், மேற்படி பணிக்கு ஆகும் செலவின தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 491**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**மன்றப்பொருள்:17**

பத்மநாபபுரம் நகராட்சியில் சிறப்பு வார்டு சபா கூட்டம் 29/10/2025ம் தேதியில் நடை பெற்றதில் அப்பகுதி பொதுமக்கள் கீழ் கண்ட பணிகள் செய்து தரக்கோரி மனு அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் இடத்தை ஆய்வு செய்யப்பட்டடு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டு தொகைக்கு நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேற்படி பணிகளின் விபரம் கீழ் கண்டவாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | வார்டு எண்:17ல் அப்பட்டி விளை பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலில் மூடிகள் அமைக்கும் பணி. | 1,50,000/- |
| 2. | வார்டு எண்:17ல் தாஸ் மருத்துவமனை பேலஸ் ரேட்டில் அமைந்துள்ள மழைநீர் வடிகாலில் மூடிகள் அமைக்கும் பணி. | 1,50,000/- |
| 3. | வார்டு எண்:18ல் அமலா காண்வெண்ட் ரோடு மற்றும் குற்றகரை ரோடு சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி. | 2,00,000/- |
| 4. | வார்டு எண்:18ல் கொல்லன்விளை பகுதியில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி. | 2,00,000/- |
| 5. | வார்டு எண்:18ல் குற்றகரையில் உள்ள மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணி. | 2,50,000/- |
| 6. | வார்டு எண்:19ல் ஓணப்பாறை பகுதியில் உள்ள அழகராமன் கோவில் தெருவில் சாலை அம்மைக்கும் பணி | 1,75,000/- |
| 7. | வார்டு எண்:19ல் அழகராமன் கோவில் தெருவில் உள்ள கிணறை தூர்வாரும் பணி. | 75,000/- |
| 8. | வார்டு எண்:20ல் கரும்பாறை தெருவில் சாலை அமைக்கும் பணி. | 2,00,000/- |
| 9. | வார்டு எண்:21ல் இரட்டை தெருவில் வேகத்தடை அமைக்கும் பணி. | 50,000/- |

**(ந.க.எண்:2447/2025/E1)**

**அ.கு:**

பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும், மேற்படி பணிக்கு ஆகும் செலவின தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 492**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**மன்றப்பொருள்:18**

பத்மநாபபுரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சேதமடைந்த பள்ளிகளை புரனமைப்பு செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:9733/2025/SS2, நாள்:25/07/2025ம் தேதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. பணியின் விபரம் பின்வருமாறு:

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ(இலச்சத்தில்) |
|---|---|---|
| 1 | Renovation of School @ Government Higher Secondary School at Thuckalay in Padmanabhapuram Municipality. | 30.00 |
| 2 | Renovation of School @ Brammapuram Government School in Padmanabhapuram Municipality. | 36.00 |
| 3 | Renovation of School @ Government Middle School Mettukadai in Padmanabhapuram Municipality. | 36.00 |
| 4 | Renovation of School @ Puliyoorkurichi in Padmanabhapuram Municipality. | 30.00 |
| | **மொத்தம்:** | **132.00** |

வரிசை எண்:3ல் காணும் பணிக்கு பணியின் பெயர் மேட்டுக்கடை நடுநிலைப்பள்ளி (Middle School) என தவறுதலாக உள்ளது. அதனை தொடக்கப்பள்ளி (Primary School) என மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**(ந.க.எண்:436/2025/E1)**

**அ.கு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 493**

**மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**மன்றப்பொருள்:19**

பத்மனாப்புரம் நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள் டோனர் மற்றும் A4, A5, A3, பேப்பர் போன்ற பொருட்கள் உட்பட 2025–2026 அன்று ஆண்டிற்குரிய பொருட்கள் வாங்க ஆகும். உத்தேச செலவினம் 3,00,000/–ற்கு மேற்கண்ட பொருட்கள் அனைத்தும் தக்கலை கூட்டுறவு முலம் பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 494**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**<u>மன்றப்பொருள்:20</u>**

பத்மநாபபுரம் நகராட்சி அணைத்து பிரிவிலும் 2025-26 ம் ஆண்டில் நடைபெறும் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோ தேர்தல் மற்றும் அரசால் அவ்வப்போது தெரிவிக்கும் திட்டங்கள் தொடர்பாக பொதுமக்கள் அறியும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக உத்தரவின் படி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் பெறப்படும் பட்டியல் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ.5,00,000/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்:021/2019/E1)**

**<u>அ.கு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்ற தீர்மானம் எண் 495**

மன்றம் அனுமதி வழங்கப்பட்டது

**நகர்மன்ற தலைவர்**

**பத்மநாபபுரம் நகராட்சி**